**<u>செய்தி வெளியீடு எண்.122</u>** **<u>நாள்.19.2.2009</u>**

**இந்திய தொழில்கூட்டமைப்பின் உதவியோடு நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற 2009 ஆம் ஆண்டுக்கான வெளிநாடுவாழ் இந்தியர் மாநாட்டில் பங்குபெற வருகைதந்த முக்கிய விருந்தினர்கள் மற்றும் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளுக்குச் சிறப்பான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளையும், பிற வசதிகளையும் செய்து தந்த காவல் துறை மற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் 500 ரூபாய் வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, ஊக்கத்தொகை வழங்கிட ஏற்கனவே அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் காவல் துறை அலுவலர்களுக்கும், பிறதுறைகளைச் சார்ந்த அலுவலர்களுக்கும் ஒரு சில நாள்களில் ஊக்கத்தொகை வழங்கப்படும்.**

**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.